Underground drainage schemes

*498. *Q.*—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether underground drainage scheme has not been fully implemented in Salem Municipality ;

(*b*) the estimated cost of the scheme ; and

(*c*) when it would be completed ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இதுவரை திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

(இ) and (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. கே. விநயகம்: சேலம் நகரத்திலே அண்டர்கிரவுண்ட் ட்ரெயினேஜ் சிஸ்டத்திற்காக இதுவரையிலும் அனுமதி கொடுக்காததற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா? அரசாங்கம் அதைப் பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சேலத்திற்கு ஒரு சாக்கடை வடிகால் திட்டம் ஏற்படுத்த 1920-லே 16 லட்ச ரூபாய்க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அப்போதிருந்த நிலையில் அது செய்ய முடியாது என்று கருதி, 5,70,000 ரூபாய் செலவில் ஒரு சிறிய திட்டம் போடப்பட்டு படிப்படியாக அதைச் செய்து முடித்தார்கள். ஆனால், பாதாள சாக்கடை கட்ட வேண்டுமென்ற முடிவு 1963-ஆம் ஆண்டிலே சீப் என்ஜினீயர் (என்ஜினீயரிங் அன்டு முனிசிபல் ஒர்க்ஸ்) சொல்லி 92,62,000 ரூபாய் செலவிலே செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். அதற்காக 28,500 ரூபாய் அடிப்படையான ஆரம்ப பூர்வாங்க வேலைகளுக்காக, ஆராய்ச்சிக்காக ஒதுக்கி அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது. அதற்குப் பிறகு திருமணிமுத்தாறு என்ற ஆறு சேலம் நகரத்திற்கு இடையிலே ஓடுகின்ற காரணத்தாலே கழிவுநீர் கலக்கிறது. அதனால் தண்ணீர் அசுத்தப்பட்டு விடுகிறது. எனவே, கழிவுநீருக்காகத் தனியாக வடிகால் ஏற்படுத்த வேண்டும் என்ற அளவிலே திருமணிமுத்தாறுக்கு இரு கரைகளிலும் சுவர்கள் எழுப்பி அந்தக் கழிவு நீரைக் கொண்டுபோய் விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய முறையில் அந்த முனிசிபல் கமிஷனர் கேட்டிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தக் கழிவு நீரை ஸுவேஜ் பார்ம்-க்குக் கொண்டுபோய் மீண்டும் அதை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக் கூடிய முறையில் செய்யலாம் என்று யோசிக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் 12½ சத வீதம் இதற்காக உதவி கொடுக்கிற காரணத்தாலே கழிவு நீரைக் கொண்டுபோய் விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய காரணத்தாலும் புதிய முறையிலே திருமணிமுத்தாறு கரைகளில் சுவர்கள் கட்டுவதற்காக 3 கோடியே 35 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்பட்டால் 3 லட்ச ரூபாய் ஆண்டொன்றுக்கு அதைப் பராமரிப்பதற்காக முனிசிபாலிடிக்குச் செலவாகக் கூடிய நிலைமையும் இருக்கிறது. எனவே அந்த நகராட்சி வருஷத்திற்கு 3 லட்ச ரூபாய் செலவழிக்கக்கூடிய நிலையில் ஒப்புதல் தந்தால் செய்யலாமென்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால் அந்த நகராட்சியிடமிருந்து எந்த விதமான தகவலும் இல்லை.

*499 *Q.*—Thiru N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the details of the underground drainage scheme sanctioned for Alandur and its neighbourhood ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆலந்தூர் நகரத்துக்கு வடிகால் திட்டத்திற்கான ஒப்புதல் அரசு அளிக்கவில்லை. ஆனால், இத் திட்டத்திற்கான புலனாய்வுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தத் திட்டத்திற்கு மொத்த மதிப்பீடு எவ்வளவு ஆகும் என்று அறிவிப்பீர்களா?